DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 84/2018

PROSECUTION WITNESS L.W.4/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரத்குமார் | தகப்பனார் பெயர் | ஆண்டமுத்து |
| கிராமம் | நத்தகாட்டுபாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, நத்தகாட்டுபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சிக்மா ஆபிஸில் வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 29.05.2018 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் புங்கம்பாடியில் உள்ள எனது தாத்தா வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது திண்டல் கபே அருகே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது எனது பள்ளியில் படித்த பிரேம்குமாருக்கு அடிபட்டு இருந்தது. நான் என்ன என்று கேட்டபோது விபத்து ஏற்பட்டது என கூறினார். நான் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி அவருடன் கேர் 24 மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு பிரேம்குமாருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் போலீசார் அங்கு வந்து விசாரித்தார்கள். பின்னர் அன்றிரவு சிகிச்சை முடிந்து பிரேம்குமாரை அவரது வீட்டில் இறக்கிவிட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஈரோட்டிலிருந்து புங்கம்பாடி செல்ல வேண்டும் என்றால் இடது புறமாக உள்ள ரோட்டில் மேட்டுக்கடை வழியாக செல்ல வேண்டும் என்றால் ஆமாம். திண்டல் கபே உள்ள பகுதி ரிங்ரோடு வந்து சேரும் இடம் என்றால் இல்லை. நான் சென்ற ரோட்டின் எதிர் திசையில் உள்ள ரோட்டில் பிரேம்குமார் அடிபட்டு கிடந்தார் என்றால் ஆமாம்.

**மறு விசாரணை**

**இல்லை.**

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:47:21 +0530

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:47:26 +0530

Judicial Magistrate No.I, Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 84/2018

PROSECUTION WITNESS L.W.2/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | தகப்பனார் பெயர் | முருகேசன் |
| கிராமம் | சம்பத் நகர் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் லேத் வொர்க்ஷாப் வைத்து வருகிறேன்.

2) கடந்த 29.05.2018 ம் தேதி நானும் எனது அண்ணன் இளங்கோவனும் எனது இருசக்கர வாகனத்தில் சென்னிமலை கோவிலுக்கு சென்று விட்டு வந்து கொண்டிருந்த போது எனது அண்ணன் விஜயசேகரன் போன் செய்து அவரது மகன் பிரேம்குமாரை கல்லூரியில் சேர்ப்பதற்கு பணம் வேண்டும் என்றும், அவர்கள் AET பள்ளியில் இருப்பதாகவும் வெள்ளாளர் கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்று கூறினார். நானும் இளங்கோவனும் AET பள்ளிக்கு சென்று டிசி வாங்கிய பிறகு வெள்ளாளர் கல்லூரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். எங்களுக்கு முன்னால் எனது அண்ணன் விஜயசேகரனும் பிரேம்குமாரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள். விஜயசேகரனும் பிரேம்குமாரும் ரோட்டின் இடது பக்கமாக திண்டல் மேடு அருகே உள்ள வளைவில் சென்றுகொண்டிருந்த போது Hotel Raja பேருந்து முன்னால் சென்று கொண்டிருந்த வேனை ஓவர் டேக் செய்து இடது புறமாக கிராஸ் செய்த போது விஜயசேகரன் ஓட்டிக் கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதியதில் பிரேம்குமார் வண்டியுடன் சேர்ந்து இடது புறமாக விழுந்துவிட்டார். விஜயகேசரன் வலது பக்கத்தில் கீழே விழுந்துவிட்டார். பேருந்து பிரேம்குமாரை சிறிது தூரம் இழுத்துச் சென்றது. பேருந்தின் பின் பக்க சக்கரம் விஜயசேகரன் மீது ஏறி சிறிது தூரம் சென்று நின்றுவிட்டது. நாங்கள் சென்று பிரேம்குமாரை நானும் பிரேம்குமாரின் நண்பரும் ஆம்புலன்சில் ஏற்றி அவருடன் மருத்துவமனைக்கு சென்றோம். விஜயசேகரனை ஆம்புலன்சில் ஏற்றி எனது அண்ணன் அனுப்பிவைத்தார். hotel Raja பேருந்தின் ஓட்டுனரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். நீதிமன்றத்தில் இருக்கும் ஆஜர் எதிரி தான் சம்பவத்தின் போது hotel Raja பேருந்தை ஓட்டினார். எனது அண்ணன் விஜயசேகரன் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம்

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.06.08 17:47:33 +0530

என்னுடையது தான். நான் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டதால் கையொப்பம் செய்தேன். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) விஜயசேகரனின் பிரேத விசாரணையின் போது நான் உடனிருந்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

போலீசார் விபத்து நடந்த இடத்தை அடையாளம் காட்ட சொல்லி என்னையும், எனது அண்ணனையும் அழைத்து சென்று பார்வையிட்டு விசாரணை செய்து மாதிரி வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகஜரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் கேட்ட போது ஏன் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக கூறினேன் என்றால் இரண்டு, மூன்று கையெழுத்து வாங்கினார்கள் அதனால் கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஈரோடு, நசியனூர் ரோடு கைக்காட்டி வலசில் கடை வைத்துள்ளேன் என்றால் ஆமாம். நானும் எனது அண்ணனும் சென்னிமலை கோவிலுக்கு சென்றுவிட்டு வந்ததாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். ரயில்வே ஸ்டேசனில் இருந்து சென்னிமலை செல்லும் ரோடு தனியாக உள்ளது என்றால் ஆமாம். நானும் இளங்கோவனும் பணம் கட்டுவதற்காக AET பள்ளிக்கு சென்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் ஆமாம். இரண்டு, மூன்று கையொப்பங்கள் செய்ததால் எந்த கையொப்பத்தை எங்கு வைத்து செய்தேன், எதற்காக செய்தேன் என்று எனக்கு தெரியாது என்றால் காவல் நிலையத்தில் ஒரு கையொப்பமும், சம்பவ இடத்தில் ஒரு கையொப்பமும் செய்தேன். சம்பவ இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு எந்த அதிகாரி முன்னிலையில் கையொப்பம் செய்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் சொல்லும் திண்டல் மேடு என்ற இடம் பெருந்துறையில் இருந்து ஈரோடு வரும் ரோட்டில் AET பள்ளியை தாண்டி திண்டல் கபே உள்ள மூன்று ரோட்டை தாண்டி திண்டல் மலைக்கு பின்புறமாக உள்ள வளைவைதான் கூறுகிறேன் என்றால் ஆமாம். AET பள்ளியிலிருந்து திண்டல் மேடு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் ஆமாம். திண்டல் கபே அருகே மூன்று ரோடுகள் உள்ளது என்றால் சரிதான். திண்டல் கபேயில் இருந்து திண்டல் மேட்டிற்கு வரவேண்டும் என்றால் சுமார் அரை கிலோ மீட்டரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் வரை ஈரோடு - பெருந்துறை ரோட்டில் வரவேண்டும் என்றால் ஆமாம். ஈரோட்டிலிருந்து பெருந்துறை செல்லும் சாலையின் நடுவே டிவைடர் உள்ளது என்றால் சரிதான். திண்டல் மேடு, செங்காடு, கலை ஐயன் பேக்கரி முன்பு சம்பவம் நடந்ததாக நான் போலீசாரிடம் அடையாளம் காட்டினேன் என்றால் ஆமாம். நான்

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.06.08 17:47:39 +0530

அடையாளம் காட்டிய போது அங்கிருந்த இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் ஆமாம். விபத்தை ஏற்படுத்திய பேருந்து நிற்காமல் சென்றுவிட்டது என்றால் ஆமாம். நான் திண்டல் மேடு நோக்கி வந்து கொண்டிருந்த போது வேன் பின்னால் வந்து கொண்டிருந்த பேருந்து வேனை முந்தி இடது பக்கமாக சென்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. நான் போலீசாரிடம் வேன் எந்த இடத்தில் சென்று கொண்டிருந்ததது என்பதையும் பேருந்து எவ்வாறு மோதி நிற்காமல் சென்றது என்பதையும் கூறினேன் என்றால் ஆமாம். திண்டல் மேடு பகுதியில் இருபுறமும் வாகனங்கள் அதிகமாக வந்து சென்று கொண்டிருக்கும் என்றால் ஆமாம். அடிபட்ட இருசக்கர வாகனத்தின் உதிரி பாகங்கள் அங்கு கிடந்ததா என்றால் இல்லை. எனக்கு முன்னால் எத்தனை வாகனங்கள் சென்று கொண்டிருந்தது என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் ஆமாம். விபத்தை ஏற்படுத்திய பேருந்தையோ அதன் ஓட்டுனரையோ நான் போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் ஆமாம். அடிபட்டு கிடந்த பையன் மயக்கநிலையில் இருந்தாரா என்றால் பதட்டமாக இருந்தார். பேசிக்கொண்டு தான் இருந்தார். திண்டல் மேடு அருகே போலீசாரின் சோதனை சாவடி இருந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. விபத்து நடந்த உடன் வாகன நெரிசல் ஏற்பட்டு போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் ஆமாம். போலீசார் வாகனங்களை அப்புறப்படுத்தி என்ன நடந்தது என்று என்னிடம் கேட்டார்கள் என்றால் ஆமாம். நான் சொன்ன விவரங்களை போலீசார் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் ஆமாம். செங்காடு, கலை ஐயன் பேக்கரி ரோட்டின் தென்புறம் இருந்ததா வடபுறம் இருந்ததா என்றால் இடது பக்கம் இருந்ததாக நியாபகம் உள்ளது. திசை சரியாக தெரியவில்லை. நான் சொன்ன தேதி, நேரத்தில் விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்றாலும், நான் தூரமாக வந்து கொண்டிருந்ததால் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்காகவும் நஷ்ட ஈடு பெறவேண்டியும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:47:45 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 84/2018

PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேம்குமார் | தகப்பனார் பெயர் | விஜயசேகரன் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் IT கம்பெனியில் வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 29.05.2018 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு டிசி வாங்குவதற்காக AET மெட்ரிக்குளேசன் பள்ளிக்கு பேருந்தில் சென்றேன். எனது அப்பா விஜயசேகரன் அவரது இருசக்கர வாகனத்தில் பள்ளிக்கு வந்தார். டிசி வாங்கிவிட்டு எனது அப்பா இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து இருவரும் வெள்ளாளர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தோம். திண்டல் மேடு அருகே நாங்கள் சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு பின்னால் ஆரன் அடிக்காமல் வேகமாக வந்து கொண்டிருந்த Hotel Raja பேருந்து நாங்கள் வளைவில் திரும்பிய போது வலது பக்கம் ஹேண்டல் பார் மீது மோதியதில் நான் இருசக்கர வாகனத்தின் மீது விழுந்துவிட்டேன். எனது அப்பா ரோட்டில் விழுந்துவிட்டார். எனது அப்பாவின் மீது பேருந்துதின் பின் பக்க சக்கரம் ஏறிவிட்டது. பேருந்தின் பின்னால் இருந்த கம்பியில் எனது சட்டை மாட்டிக்கொண்டது. பேருந்து சிறிது தூரம் என்னை இழுத்துச் சென்றது. பின்னர் நான் கீழே விழுந்து விட்டேன். எனக்கு காலில் பலமாக அடிபட்டு விட்டதால் என்னால் எழுந்திருக்க முடியவில்லை. அருகில் கடையில் இருந்த எனது நண்பரும் பின்னால் வந்து கொண்டிருந்த எனது சித்தப்பாவும் என்னை ஆம்புலன்சில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். எனது அப்பாவை எனது பெரியப்பா மருத்துவமனையில் சேர்த்தார். பின்னர் எனது அப்பா இறந்துவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். எனது வலது கையில் முழுவதும் சிராய்ப்பு காயங்களும், வலது தோள்பட்டை மற்றும் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள். பேருந்தை இயக்கிய நபரை நான் பார்க்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் AET மெட்ரிக்குளேசன் பள்ளிக்கு தனியாக பேருந்தில் சென்ற விவரத்தை

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.06.08 17:48:01 +0530

போலீசில் கூறினேன். AET பள்ளியிலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் கிலோ மீட்டர் சரியாக தெரியவில்லை. திண்டல் கபே எதிரில் விபத்து நடந்தது. திண்டல் கபே உள்ள இடம் மூன்று ரோடுகள் சந்திக்கும் பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் ரவுண்டானா உள்ளது என்றால் ஆமாம். ரவுண்டானா முன்பாக ரோடு வளைவாக அமைந்துள்ளது என்றால் சரிதான். ரோடு வளைவாக உள்ள பகுதி திரும்பிய போது விபத்து நடந்ததாக போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றால் ஆமாம். மூன்று ரோடுகள் சந்திக்கும் பகுதியில் ரோடுகளில் வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் பேருந்து இருசக்கர வாகனத்தில் வலது பக்கத்தில் மோதியதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. AET பள்ளியிலிருந்து திண்டல் செல்லும் சாலை கிழக்கு மேற்காக உள்ளது என்றால் திசை எனக்கு சரியாக தெரியாது. திண்டல் செல்லும் சாலையில் இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் அதிகம் செல்லும் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து இருந்ததால் அடிபட்ட பின்னர் தான் எனக்கு என்ன நடந்தது என தெரியவந்தது என்றால் ஆமாம். பேருந்தின் கம்பியில் எனது சட்டை இழுத்துச் சென்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பேருந்தின் பின்பக்க சக்கரத்தில் தான் எனது அப்பா விழுந்துவிட்டார் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த பின்னர் நான் மயக்கமாகிவிட்டேன் என்றால் ஆமாம். அன்றைய தினமே எனக்கு மயக்கம் தெளிந்துவிட்டது. அன்றைய தினம் இரவு எனது வலது கை மற்றும் காலில் கட்டு போடப்பட்டு நான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன். போலீசார் என்னை கேர் 24 மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்ன எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நான் சொல்லியதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். போலீசார் படித்துக் காட்டினார்கள் நான் கையொப்பம் செய்தேன். என்னை விசாரித்த போலீசாரின் பெயர் எனக்கு தெரியாது. எனக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த போது போலீசார் என்னை விசாரித்தனர். எனது அப்பாவின் இறப்பிற்கும் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்தோம். நான் சொன்ன தேதி, நேரத்தில் விதத்தில் புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நஷ்ட ஈடு பெற வேண்டும் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் சேர்த்த நண்பரின் பெயரை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றாலும், விபத்திற்கு காரணம் எனது தகப்பனாரின் கவனக்குறைவு என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:48:07 +0530

Judicial Magistrate No.I,
Erode.